www.padippakam.com

# லிபியாவில்

# அமெரிக்க ஆக்கிரமிப்பு ஒழிக!

லிபியாமீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்திய அமெரிக்காவை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது!

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாகரிக பண்பாட்டை மீறி அமைதி விரும்பும் லிபிய மக்கள் மீதும் குண்டுகள் பொழிந்துள்ள கேடு கெட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நாம் ஆக்ரோஷத்துடன் கண்டிக்கின்றோம்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையிலுள்ள கொள்ளைக்காரர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்த சர்வதேச பயங்கரவாதமானது, இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டுவந்துள்ள நீண்ட பட்டியலில் மேலும் ஒரு நடவடிக்கையாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத் திட்டங்களுக்குத் துணை போவதாக இந்த நாடுகளின் கொள்கைகள் இல்லாமலிருப்பதே இவ்வித கொலைச் செயல்களுக்குக் காரணமாயிருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இவ்வித நாசகார செயல்கள் —

பலஸ்தீன மக்கள்மீது நாள்தோறும் கட்டவிழ்த்து விடப்படும் ஸயோனிச பயங்கரவாதத்திலிருந்து உலகின் கவனத்தைத் திசை திருப்புவதற்கும், அரபு மக்களின் நலன்களைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ள அரபு தேசியவாதத்தைத் தடுப்பதற்கும்கூட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இருப்பதாகவே கருதுகிறோம்.

எனவே மனித சமுதாயத்திற்கே விரோதமான ஏகாதிபத்திய வாதிகளின் இவ்வித தாக்குதல்களை மிகக் கடுமையாக மீண்டும் மீண்டும் கண்டிக்கின்ற நாம் —

அப்பட்டமான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கெதிராக லிபிய மக்களுக்கும், அவர்தம் புரட்சிகரத் தலைவர் தோழர் கர்னல் கடாபி அவர்களுக்கும் எமது ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போர்க்குணமிக்க, சமாதானம் விரும்பும் லிபிய மக்களுக்கெதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் இந்தப் புதிய தாக்குதலைக் கண்டிக்குமாறு சமாதானம் விரும்பும் உலக மக்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

★ ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளே ஒன்றுபடுக!

★ உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுக!

★ ஏகாதிபத்தியம் ஒழிக!!

15-04-86 — தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

செய்தி - தொடர்புக் கிளையகம்:

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்,

28, சி. என். கே. சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5

படிப்பகம்

www.padippakam.com

# DOWN WITH US AGGRESSION IN LIBYA

The People's Liberation Organisation of Thamileelam condemns in the strongest terms the latest flagerant violation of internationally accepted civilised behaviour by the US imperialists in its totally unprovoked attack on the peace-loving Libyan people.

This latest act of international terrorism, unleashed by the brigand in the white House is one more in the long list of American intervention and interference in the affairs of sovereign states whose policies do not coincide with US hegemonic designs.

These acts of brigandry, perpetrated by the US are at the same time designed to divert international attention away from the Zionist terrorism being daily carried out on the Palestinian people as well as a means of preventing Arab nationalism asserting itself to protect the interests of the Arab people.

The People's Liberation Organisation of Thamileelam expresses its total solidarity with the people of Libya and their revolutionary leader Colonel Quadafi in the face of naked imperialist aggression, and calls on all peace-loving people the world over to condemn whole-heartedly this latest act of American aggression against the militant and peace-loving people of Libya.

**★ ALL FORCES OF ANTI-IMPERIALISM UNITE!**

**★ DOWN WITH IMPERIALISM!**

**★ WORKERS OF THE WORLD UNITE!**

*15-04-86* — PLOT

---

Issued by The Press & Information Secretariat of The PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM, (PLOT), 28, C. N. K. ROAD, TRIPLICANE, MADRAS-600 005.

படிப்பகம்